# ஆத்ம ஜோதி



பகவான் அரவிந்தர்

ஓம்.

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே — சுத்தானந்தர்

சோதி 4 | நந்தன வருஷம் ஆனி மீ 1 திகதி | சுடர் 10

## பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உனது பணிபுரியவருள் | சுத்தானந்தர் | 253 |
| அரவிந்தர் மஹாசமாதி | சு. பா. | 254 |
| அரவிந்தயோக லட்சியம் | ஆசிரியர் | 255 |
| பாரதசமுதாயத்தினரின் சக்தி | ச. மு. பி. | 260 |
| இயற்கையின்—நடைமுறைக்கு | சித்பவானந்தர் | 262 |
| சித்தமார்க்கவரலாறு | திரு. வி. க. | 267 |
| சண்முகனே-சம்பந்தன் | சுப்ரமண்யபாரதி | 269 |
| சற்குரு | பரமானந்தவல்லி | 271 |
| ஸ்திரீ தர்மம் | சரஸன் | 274 |
| வெயிலுகந்த பிள்ளையார் | திருவருள் | 276 |
| ஜீவதாபம் | மூ. சி. | 278 |


ஆத்மஜோதி.

ஆயுள்சந்தா ரூ 75/— வருடசந்தா ரூ 3/- தனிப்பிரதி ச. 30

ஆத்மஜோதி நிலையம். நாவலப்பிட்டி, இலங்கை

## உனதுபணி புரியவருள் குருநாதா !

தினமெனது மனமுருகி சிவபரம குருவெனவே
சித்தத்தில் வைத்துத் துதித்துத் துதித்துனது
திருவருளே வேண்டுமென திருளகல இரவியென
—வருவாயே

கனவினிலு நனவினிலு மெனதுமன முனதடியிற்
கட்டுண் டிருக்கவினை சுட்டுண் டறக்குமைய
கவலைதுயர் பிணிமடமை வறுமையிடர் படவுனது
—துணைதாராய்

சினமொழிக நசைபெருகு தினவொழிக வசையொழிக
சிக்கற்று மதிபொலிய துக்கப் பந்தனைவிலக
சிறுமையறப் பகைவர்தரு கொடுமையறக் கருணை
பொழி—பகவானே

உனதுமன முனதுசெய லுனதுக்ருபை உனதுசரண்
ஓம்சுத்த சக்தியென நான்பக்தி செய்துநிதம்
உனதுலகி லுனதுபணி புரியவுயிர் வாழவருள்
—பரமாத்மா.



சுத்தானந்த பாரதி

# அரவிந்தர் மஹாசமாதி.

அப்பா அரவிந்தா அத்யாத்ம தத்துவா
ஒப்பாரு மில்லாத யோகியெனச்—செப்பநின்ற
புண்ணியனே போயினையே பூவுலகில் நீசொன்ன
விண்ணரசை யாம்காணுமுன்.

—க. இ.

ஆராரும் காணு அரவிந்தா நின்உடலைப்
பாராரும் காணப் பறந்தாயே—சீராரும்
யோகத்தால் போகம் உவந்தாய் அரவிந்தா
ஏகத்தால் என்னுள் இரு.

எண்ணி எழுதி இயற்றுமுன் போற்கனவால்
மண்ணுலகம் பொன்னுக மாறுமுன்னே—விண்ணரசு
விண்ணிலே என்று விரைந்தாய் அரவிந்தா
புண்ணிய என்நெஞ்சிற் புகு

நித்தியமே தேகமெனே நீளப் பறையடித்த
சித்தர்களும் ஊனுதறிச் சென்றுவிட்டார்—இத்தலத்தில்
எந்தை இறையருளே எண்ணி எனதுயிரே
வந்தவினை செய்து மகிழ்.

சு. பா.

(1950 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த மஹாசமாதியின் போது பாடப்பட்டவை)

# அரவிந்த யோக லட்சியம்.

(ஆசிரியர்)

வங்கத்தில் அவதரித்து, வங்கத்திலேயே 'கர்மயோகி' என்னும் பத்திரிகை ஆசிரியராய் கீதை விளக்கும் நிஷ்காமிய கர்ம யோகத்திற் கோர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாய் விளங்கி, மகாத்மா இராமலிங்கரின் தீர்க்கதரிசன வாக்கில் அடங்கிய 'உத்தரயோகி' அவரே எனத் தமிழ் நாடு வரவேற்றுப் புகழ நாற்பது ஆண்டுகளாய்ப் புதுவையில் தவஞ்செய்த பூரணயோகியாம் பகவான் அரவிந்தரின் வாழ்க்கைக் குறிப்புகள் பல முன்னரேயே இந்த வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டபடியால் அவற்றை மறுபடியும் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை:

மனித சமுதாயத்தின் நவயுக சிற்பியாக விளங்கிய இந்த மகானை, இருபதாம் நூற்றுண்டு கண்ட ஒரு தனித் தீர்க்க தரிசியென அழைத்தல் புகழ்ச்சியுரையாகாது. அலிப்பூர் சிறையில் நாராயண தரிசனம் பெற்று அவர் வெளிவந்த காலத்து (1909-ம் ஆண்டில்) அவரைக்கண்டு அத்யாத்ம விஷயங்கள் பற்றி அவர் கருத்தை அறிய விரும்பிய தமிழ் நாட்டு அன்பர் ஒருவர் மூலம் அவர் இந்தியாவுக்கு அளித்த சாசனத்தில் கீழ்க்கண்ட வசனம் அடங்கியிருந்தது.

"1907-ம் ஆண்டுமுதல் உலகில் ஒருபுதிய காலம் தொடங்கியுள்ளது. உலகில் ஒரு மஹாப் பிரளயம் உண்டாகும்; உயர்ந்தோர் தாழ்வர்; தாழ்ந்தோர் உயர்வர்; நமது சனங்களிடையே பெரிய மாறுதல்கள் ஏற்படும்; புதிய சிந்தைகள் புதியமுயற்சிகள் எல்லாச் செயல்களிலும் புதிய வழிகள் ஏற்படும்"

சென்ற நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குள் நடந்த அகோரமான இரு உலகயுத்தங்களையும், அவற்றின் பயனுக எழுந்துள்ள அரசியல் கிளர்ச்சிகளையும் சமுதாயப் பிரச்சினைகளையும், பொருளாதாரத் திட்டங்களையும் கருத்தூன்றிப் படிக்கும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அரவிந்தர் வாக்கில் அடங்கியிருந்த

தீர்க்கதரிசனம் பதியாமல் இருக்கமுடியாது. புதுவை ஆச்சிரமத்தில் அவரது ஜென்மதின விழாவைக்கொண்டாட அன்பர்கள் விரும்பியபோது, முதலில் அவர் உத்தரவு கொடுக்கமறுத்துவிட்டார் திரும்பவும் திரும்பவும் அடியார்கள் வற்புறுத்தியதின் பேரில் அவர் அதற்கு இணங்கியபோது, இந்தியா சுதந்திரம் பெறும் தினம் தமது ஜென்ம நாளாகிய ஆகஸ்ட் மாசம் பதினைந்தாம்தேதியாகவே அமையப்போவதால் அத்தினத்தைக்கொண்டாடுவதில் ஓர்விசேடசிறப்பு உண்டென்றார். இது நிகழ்ந்தது 1921 ஆண்டிலாகும் 1942ம் ஆண்டில் இந்தியாவின் அரசியல்தலைவர்கட்கு அவர்விடுத்த செய்தியில் அற்புதமாய் அடங்கியிருந்த தீர்க்கதரிசனத்தை அவர்கள் அணுவேனும் உணரவில்லை. அவரது ஆலோசனையைப் புறக்கணித்ததால் நாடு அடைந்த தொல்லையும் துயரும் சகலரும் அறிந்ததே. தமிழ் நாட்டுத்தனிப்பெருந் தலைவரும் உண்மையான கர்மயோகியுமான ராஜாஜி ஒருவருக்கே அரவிந்தர் அருள்வாக்கைஉணரக்கூடிய திவ்யதிருஷ்டி இருந்ததெனலாம். ஆத்திரமும் அவசரமுங்கொண்ட மக்களின் செவியில் அவர் பேச்சும் ஏறவில்லை; நிற்க, இக்கட்டுரையின் முக்கியநோக்கமான அரவிந்தர் யோகத்திற்கு வருவோம்,

கடவுள்பொய்யென்னும் நாஸ்திகவாதத்தை எவ்விதம் கண்டித்தாரோ அதேவிதம் உலகம் பொய்என்னும் மாயாவாதத்தையும் அரவிந்தர் கண்டித்தார் கடவுள், உயிர், உலகம் இம்மூன்றிற்குமிடையேயுள்ள இணைபிரியாத தொடர்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது அவர் கொள்கை. எனவே இறைவன்எப்போது உண்மையோ அப்போதே அவன் படைத்தஉலகும் உண்மையாகிறது, உயிர் வாழ்வாகப்பொலியும் அந்த இறைவனைக்கண்டுகலப்பதே உயிரின் கருத்து. மனிதவாழ்க்கையின் நோக்கம் தெய்வநிறைவும், தேவஜீவனமும் பெறுதலேயாம். இந்தமுறையில் மனிதனைத்தெய்வசிகரத்திற்கு உயர்த்துவதே அவரின் யோகலட்சியம்;

அரவிந்தரின் யோகம் கடினமானது; அதின் நோக்கமும் கடினமானது. வாழ்வு முழுவதையுமே யோகமாக்கும் அவரது புது நெறியில், உலகில் இதுவரையில் தோன்றிய பெரியார்கள்



ளின் வகுத்த சாதனைகளின் நன்மைக்கெல்லாம் ஒருங்கே அமைந்திருப்பதோடு, நவீன பௌதிகசாஸ்திர முறையில் ஆத்மீக வளர்ச்சியை விளக்கும் சில புத்தம்புதிய தத்துவங்களும் நுட்பமான சாதனைவிதிகளும் தரப்பட்டுள்ளன. ஆகையால் அது பூரணயோகமென அழைக்கப்படுகின்றது, மனத்தைப் புத்தியில் அடங்கச் செய்து புத்தியை ஆத்மாவில் ஒடுங்கப்பண்ணி, சமாதியில் லயித்துப்போய்த்தனிமுறையில் தப்பித்துக்கொள்ளும் முத்திமட்டும் போதாது என்கிறார் அரவிந்தர். சடத்தில் உருக்கொண்ட மனிதனின் உணர்வு முற்றிலும் உயர்ந்தது, பரவுணர்வைக்கூட வேண்டும். அப்பரவுணர்வு பின் கீழியல்புகள் அனைத்தையும் விஞ்ஞான சக்தியான சக்தியால் மாற்றி உயர்த்த வேண்டும். ஆக்கும் சக்தியுடைய முடியுமென்கிறார் அவர்.

உண்மை, அறிவு, இன்பம், ஆகியமூன்றும் பொருந்தியபொருளான பரமாத்மாவில் இம்மூன்றும் ஒன்றாயிருக்குமேயன்றி பிரியமாட்டா. வேறுபாடேதெரியாமல் ஒன்றியிருக்கும் உச்சநிலையையடைவதற்கு சாதகன் விஞ்ஞானப்படியைத் தாண்டவேண்டும். சச்சிதானந்தத்திற்கும் மனம், பிராணன், உடலானமூன்று கீழ்க்கபூமிகட்கும் இடையே இருப்பது விஞ்ஞானம். கடவுளறிவுடன் கூடியதான அவித்தையினின்றும் விடுபட்டிருக்கும் இந்த விஞ்ஞானசக்தி இறங்கினாலன்றி மனம், உயிர், உடலின் கீழியல்புகள் மாறவேமாட்டாது. தெய்வத்தினின்றும் சதா பிரிவுணர்ச்சி கொண்டியங்குவது மனம். அதை ஒரேவீச்சில் விஞ்ஞானத்திற்கு உயர்த்துவது கஷ்டமானசாதனை, ஆகையால் மனத்திற்கும் விஞ்ஞானத்திற்கு மிடையே அதிமனம் என்னும் தத்துவத்தை அரவிந்தர் அமைத்துள்ளார். அதிமனமே ஒருவன் மனத்தினின்று விஞ்ஞானத்திற்குப்போகும் வழியாகும் என்கிறார், உன்னதமான புத்திக்கு அப்பால், உயர்ந்தொளியமனத்தை ஆளும்இந்த அதிமனந்தான் அந்தர்ஞானத்திற்கு வழி திறக்கிறது. அதின் இருப்பிடம் உச்சியிலுள்ள சகஸ்ரார சக்கரமாகும்; அரவிந்தர் அருளிய "தேவஜீவனம்" என்னும் அற்புத நூலில் இவையெல்லாம் மிகவும் அருமையாக விளக்கப்பட்டுள்ளன: அதனை அன்பளிப்பாய்ப் பெற்றவர்கள் எல்லாருமே அல்லது அதனை விலைக்கு வாங்கிப்படித்தவர்கள் சகலருமே அதிலடங்கிய நுட்பமான தத்

துவங்களை உண்மையில் விளங்கியுள்ளார்களெனக் கூறமுடியாது. பெரும்பாலும் மனோமய கோசத்திற்கப்பால் செல்லமுடியாமல் வாழும் நிலையிலுள்ள நமக்கு அவரின் சித்தாந்தம் முதலில் மயக்கத்தையே தரும். அடுத்தபடியாக, அவரது கனவு உலகில் எப்போதாவது நனவாக முடியவுங் கூடுமா என்ற கேள்வியே உதிக்கும். இவையெல்லாம் அவர் கோரிய பூரண வாழ்வின் லட்சியத்தைக் குறைக்கவோ தடுக்கவோ முடியாது. மனோலோகத்தினின்று மனம் இறங்கி எப்படி மனிதனை உண்டாக்குகிறதோ அப்படியே ஒருநாள் விஞ்ஞானமும் இறங்கி ஓர் விஞ்ஞானசாதியை உண்டாக்கியே தீரும் என்பது அரவிந்தரின் அசைவற்ற நம்பிக்கை. மனித பரிணாமப்படியில் இது ஓர் தவிர்க்கமுடியாத நியதியென்பதே அவரதுகொள்கை. நானூறு கோடிமக்கள்வாழும் இப்பூவுலகில் ஆர்வம், நம்பிக்கை, அடைக்கல உறுதியுள்ள ஒருநூறு அதிமனிதர்கள் கிடைத்தால் அவர் கோரிய பூரணயோகம் மனிதசமுதாயத்திற்கு அன்பு, ஒற்றுமை, அமைதி, சாந்தம் சுதந்திரம் சுகம் அளிப்பது திண்ணம் என்கிறார். மனிதமூளையின் அவலச்செருக்கால் நேரும் வேற்றுமைகளும் வித்தியாசங்களும் மறையவும், பேராசைபிடித்த அகம்பாவத்தால் வரும்போட்டியும் பொறாமையும் போரும் நீங்கவும் வேண்டின், அதிமனஉண்மைகளை வென்ற விஞ்ஞானிகள் உலகில் பரவவேண்டும். இனி, அரவிந்தரையே சுத்தானந்தரின் இனியதமிழில் வாசகர்கட்குப் பேசவைப்போம்

"நமது முன்னோர் கருணையால் நம்மிடம்ஆத்ம உணர்ச்சியுள்ளது- அது எத்தகைய பலத்தையும் ஊதியெறியவல்லது. ஆத்மசித்தி பெறவேண்டுமென்றால், சக்தி சாதனம்வேண்டும். சக்திவழிபாட்டைக் கைவிடுத்தோம்; சக்தியும் நம்மைக்கைவிடுத்தாள்; உள்ளக்கிளர்ச்சியால் கூத்தாடுவதால் எனக்கு நம்பிக்கையில்லை- விரிந்த அமைதியேநமதுயோகத்திற்குஆதாரமாகவேண்டும். சக்திக்கடலில் ஞானச்சுடர் கதிர்விடவேண்டும். இந்தச்சுடர்விரிவில், எல்லையற்ற அன்பும் ஆனந்தமும், நிலைத்த ஒற்றுமையின்பமும் விளையாடவேண்டும். இலட்சக்கணக்கான சீடர் வேண்டுவதில்லை. சிறுமையகந்தையின்றி, கடவுட்கருவிகளாக நூறு முழுமனிதர்கள் கிடைத்தாற்போதும் உள்விழிதிறந்த தெய்வ சைதன்யர்களே நாட்டை உயர்த்தவல்லவர்கள் தெய்வவாழ்வை விரும்புவோர்சங்கம் "தேவசங்கம்"

வாழ்வில் கடவுளை நாட்டவேண்டும்; உலகவாழ்வையும்; ஆத்மாவையும் இணைக்கவேண்டும், விஞ்ஞான நிலைக்குஉயர்ந்தாலே



ஜீவரகசியம்தெரியும். அப்போது உலகு நித்திய தெய்வலீலை ஆன்மா அந்தஉடல் விளக்கம் என்றறிவோம்; அணுத்திலும் சடத்திலும், பிரமம் காண்போம். விஞ்ஞானத்தைப் பெற்றால் நிலையான ஆனந்தம் எளிதிற்பெறலாம். உடல், உயிர், மனம் உலகு அனைத்திலும் அப்போது ஆனந்தத்தை நாட்டலாம். அப்போது பூரணசச்சிதானந்தம்வாழ்விலுருவாகும். இதுவேஎனது யோகத்தின் கருத்து."

1920ம் ஆண்டில் அரவிந்தர் விடுத்த ஒருகடிதத்தின் சாரம் இது. அதிலடங்கிய அழைப்புக்கிசைந்து, உலகின் நாற்றிசைகளிலுமிருந்துசாதிமதநிறவிதபாசம் எதுவுமின்றிவந்து கூடிய அன்பர்களின் சங்கமே பின்னாளில் ஸ்ரீஅரவிந்த ஆசிரமமாக விளங்கியதாகும். அரவிந்தர் விளங்கிய அதிமனிதர் லட்சணங்களை விபரிக்கும் சுத்தானந்தர் பாடல்கள் இரண்டைக்கீழேதந்து இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

உலகினை வெறுக்கமாட்டார்,
உள்ளொளி மறக்கமாட்டார்
கலகஞ்செய் சாதிபேதக்
கட்டுடைத் தொருமை பூண்டார்
நிலவுயர் விண்ணின்பத்தை
நிலமிசை நாட்டுவார்கள்
நலமுறு தேவசங்கம்
நடத்ததி மனிதராவார்,

சாவினைப் போய்யென்பார்கள்
சடத்தினைப் பொன்னென்பார்கள்
பூவினை யாடல் என்பர்
போகமே யோகமேன்பர்
சீவனைச் சிவமேயாக்கும்
சித்தியே முத்தியென்பார்
தேவமானிடர்கள் வாழ்க!
தீரர்கள் வாழ்க மாதோ!

# பாரத சமுதாயத்தினரின் சக்தி.

(தென்னாபிரிக்கா—டர்பன் திரு. ச, மு பிள்ளை அவர்கள்)

உலகத்தில் அமைதியின்மையும் குழப்பமும் மிகுந்திருக்கின்றன. இப்படிப்பட்ட காலத்தில் மேதாவிகள் பலர்பலவாறான நிர்மாண திட்டங்களையும் சுலோகங்களையும் தந்து, இவைதான் உலகத்தின் நோயைத்தீர்க்கவல்ல மருந்துஎன்று சொல்கிறார்கள்.

எதிர்காலத்தில் இந்த உலகம் இன்று இருப்பதைப்போல் இல்லாமல், சீர்திருந்தி லட்சணம் வாய்ந்திருக்க இவைதான் மருந்துகள் என்றுகூறுகிறார்கள், உலகம் அழியாமலிருக்கவேண்டுமானால் இந்தஉபாயங்களைக் கடைப்பிடியுங்கள் என்று சொல்கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் சொல்லுகிற உபாயங்கள் ஒவ்வொன்றும், உலகம் செளக்கியமாக இருக்கவேண்டுமென்னும் நல்லெண்ணத்தினால் பிறந்தவையெனினும், அவற்றில் ஒன்றாவது மானிட வாழ்க்கையின் அந்தரங்க தத்துவத்தை உணர்ந்து, அதற்கேற்றவாறு சிருஸ்டித்தவையாகக் காணப்படவில்லை.

அவர்கள் உபதேசிக்கும் சிகிச்சை தத்துவங்களெல்லாம் சோஷலிஸம், கம்யூனிஸம் போன்ற பல 'இஸம்'கள் சம்பந்தப்பட்டவை. 'இஸம்'களில் எந்த 'இஸம்' ஆக இருந்தாலும் அது மானிட மனோபாவம், உள்ளக் கிளர்ச்சி, விருப்பங்கள்; கனவுகள் ஆகிய வாழ்க்கை அனுபவங்களைத் தழுவிய சிகிச்சையாக இல்லை, மானிட உள்ளத்தை கணக்கில் சேர்த்துக்கொள்ளாமல், மானிட வாழ்க்கையை யந்திரம் போன்றதாகச் செய்துவிடக் கூடியதாக இருக்கின்றன. உண்மையான நாகரிகம் எது? மக்களிடையே பண்பாட்டை வளர்ப்பது எதுவோ, அதுவே நாகரிகம்; பண்பாடென்னும் நாகரிகம் ஒன்றுதான் மக்கள் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக்கொண்டு போர் செய்வதை வெறுக்கிறது. ஆகவே பண்பாடுதான் மானிட சமுதாயத்தின் தீராத நோயைத் தீர்க்கவல்ல சிகிச்சையும் மருந்துமாகும்.



ஆகவே இந்த உலகத்தில் சமுதாயத்தைச் சீர்திருத்தம் செய்யக்கூடியவர்கள் எத்தன்மை வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும்· இதுதான் முதல்பிரச்னை: தடியெடுத்தவரெல்லாம் வேட்டைக்காரராகி விடுவார்களா? உலகமனைத்தையும் ஒருநாடாக பாவித்தும் உலக மக்களனைவரையும் ஒரே மானிடசமுதாயத்தைச் சேர்ந்தவர்களென்றும் எண்ணக்கூடிய பரந்தநோக்கமில்லாமல் தனி ஜாதி, துவேஷம் படிந்த உள்ளம் இம்மாதிரி குணமுடையவர்கள் எவ்வாறு சீர்திருத்தக்காரர்களாக இருக்கமுடியும்?

இத்தன்மை வாய்ந்த தலைவர் தன்னுடைய உடல் பொருள் ஆவியை தன் ஜாதியின் அபிவிருத்திக்காக தத்தம் செய்தவராகவுமிருக்கலாம், இந்தக்காரியத்தை அவர் மனப்பூர்வமாகவும் செய்திருக்கலாம். அவருடைய ஜாதியினரின் வானுயர்ந்த ஸ்தோத்திரங்களுக்கும், புகழுக்கும் பாத்திரரானவராகவுமிருக்கலாம். ஆனால் மக்கள சமுதாயத்தில் ஒரு பகுதியின் நண்பராகவும், மற்றொரு பகுதியின் துன்பங்களுக்குக் காரணஸ்தராகவுமிருக்கும் இப்படிப்பட்ட தலைவர், எக்காலத்திலும் உலகத்தை உய்விக்கும் புருஷோத்தமாக முடியாது.

உலகத்தை ரட்சிக்கவேண்டிய இந்த கைங்கரியம் சம்பந்தப்பட்டவரை இந்திய சமுதாயம் தான்லாயக்கான சமுதாயமாகும். இந்த விஷயத்தை யாரும்மறந்துவிடக்கூடாது, உலகத்தில் எத்தனையோ தேசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திற்கும் ஒருபண்பாடு உளது. ஆனால் இந்திய நாடுஒன்றுதான் ஆத்மீகப்பண்பாட்டை பல்லாயிரம் ஆண்டுகளாக சிதைவில்லாமல் பாதுகாத்து வருகிறது. அந்த ஆத்மீகப்பண்பாட்டை அனுஷ்டானத்தில் வைத்துக்காத்துவருகிறது. ஆகவே, உலகமக்களுக்கு அந்த ஆத்மீகப் பண்பாட்டின் மகிமையை எடுத்துக் காட்டி உலகத்தை அந்த வழியில் திருப்புவதற்கு வேண்டிய லட்சணம் இந்திய சமுதாயத்திற்கே அமைந்திருக்கிறது.

ஒவ்வொருமனிதன் உள்ளத்திலும் எங்கும்பரந்து வியாபித்திருக்கும் பரம்பொருளின் சிறியபொறியொன்று இருக்கிறது, அந்தசக்தியானது வெளியேவந்துவளர்ந்து உலகத்தில்சகோதரத்துவத்தை நிலைநாட்டக்காத்திருக்கிறது. ஒவ்வொரு மனிதனையும்

[264ம் பக்கம் பார்க்க]

# இயற்கையின் நடைமுறைக்குச் சக்கரம் ஓர் சின்னம்*

சுவாமி சித்பவானந்தா

நாம் குடியிருக்கும் பூமியானது மேடுபள்ளம் மலைகடல் உடையதாகத் தென்படுகிறது. வானத்தில் நெடுந்தூரத்துக்கு அப்பால்சென்று பார்த்தால் சூரியன் சந்திரன் போன்று பூமியும் வட்டமாகத் தென்படும். உண்மையில் பூமியும், சூரியனும், சந்திரனும் உருண்டையானவைகள். வானத்தில மிதக்கும் சக்கரங்களாக அவைகள் தென்படுகின்றன. பூமி ஓயாது சுழல்கிறது. அதன் சுழற்சிக்கு இரண்டு பாங்குகள் உண்டு. தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுதற்கு ஒரு பகலும் ஒரு இரவும்பிடிக்கிறது. அதற்கு உரிய நேரத்தை ஒருநாள் என்கிறோம். பிறகு அது சூரியனைப் பிரதக்ஷணம் பண்ணுகிறது. அப்படி ஒருதடவை வட்டமிடுதற்கு ஒரு வருடம் பிடிக்கிறது. சந்திரனோ பூமியைச்சுற்றி வலம் வருகிறது. இயற்கையில் ஏற்பட்டுள்ள பெரியசக்கரங்களாகிய பூமியும் சந்திரனும் சுழல்வதால் காலம் அளந்தெடுக்கப்படுகிறது. வானத்தில் தென்படும் கோளங்கள் யாவும் சக்கரம் போன்று உருண்டோடிக்கொண்டிருக்கின்றன.

இயற்கையில் எச்செயலை ஆராய்ந்து பார்த்தாலும் அது சக்கரம்போன்று சுழன்றுகொண்டிருப்பது தென்படும். மழைபெய்கிறது. பூமியை நனைத்துவிட்டு அது நதியாக ஓடுகிறது. கடலை எட்டியபிறகு அதற்கு நதி என்ற பெயர்கிடையாது. அது கடலோடு கடலாய்விடுகிறது. அங்கிருந்து அதே நீர் ஆவியாக மேலே போகிறது. வானத்தில் அது மேகமாக மாறுகிறது; பழையபடி மழையாக பூமியிற்பொழிகிறது. நீரின்செயல் சக்கரம்போன்றது. காற்றினின்று மனிதன் பிராணவாயுவை ஏற்றுக்கொள்கிறான். கரியமிலவாயுவை அவன் வெளிப்படுத்துகிறான். அவன் நிசுவசித்த கரியமிலவாயுவைச் செடிகள் ஏற்றுக்கொள்கின்றன; அதேதாவரங்கள் தங்களுக்குப் பயன்படாத பிராணவாயுவைப் புறக்கணிக்கின்றன. இங்ஙனம் காற்றில் நிகழும் நிகழ்ச்சிகள் சக்கரம் போன்று



சுழன்று வருகின்றன. பூமியினின்று உணவுப்பொருட்கள் உண்டாவதும் அதே திரும்பவும் மண்ணாவதும் கண்கூடாகக் காணும் காட்சியாகும். ஆக மண்ணின்செயலும் சக்கரம்போன்றது. பருவங்கள் மாறிமாறி வருவது சக்கரம் சுழல்வதற்கு சமானமானது. கோடைகாலமும், மாரிக்காலமும் குளிர்காலமும் ஒன்றன்பின் ஒன்றாக வருவதில் முறையொன்று உளது; சக்கரத்தின் செயல்போன்றது அது. இயற்கையின் நடைமுறையே சக்கரம் போன்றது.

உயிர்களின் வாழ்க்கையும் ஒரு சக்கரத்துக்கு சமானமானது. வசந்த காலத்தில் மரம்செடி கொடிகள் தளிர்க்கின்றன. கோடையிலும் மாரியிலும் வளர்ந்து பூத்துக்காய்த்துப் பலன் தருகின்றன. பனியில் பட்டுப்போனவைபோன்று அவைகள் ஓய்விடுகின்றன. தாவரங்களின் வாழ்க்கைச்சக்கரம் இத்தகையது. மற்றொரு பாங்கிலும் அதே சக்கரம் காட்சி கொடுக்கிறது. செடியினின்று விதைவருவதும் விதையினின்று செடிவருவதும் முறைபிறழாதசெயலாகும். ஊர்வன நடப்பன பறப்பனவைகளுள் வாழ்க்கையென்னும் சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கிறது. உயிர்கள் தோன்றுதல் வளர்தல் தம் இனத்தைப் பெருக்குதல் தேய்தல் மறைதல் ஆகியவாழ்க்கைத்திட்டம் இவையாவினிடத்தும் ஓயாது நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. இவ்வுயிர்வகைகளுள் மனிதனுடையவாழ்க்கையில் தனிச்சிறப்புஒன்றுண்டு. மற்ற உயிர்களுக்கு ஞாபகசக்தி மிகக்குறைந்தது. மனிதனுக்கோ ஞாபகசக்தி ஓங்கிவளர்ந்துள்ளது. பகுத்தறிவிலும் அவன் மிகச்சிறந்தவனாயிருக்கின்றான்; தனது அறிவையும் அனுபவத்தையும் மற்றவர்களுக்கு எடுத்துப்புகட்ட அவனுக்கு இயலுகிறது. அதனால் மக்களுள் கல்வி வளர்வதாயிற்று. மானுடவாழ்க்கையைப் பற்றிய வரலாறுகளை மனிதன் குறித்து வைத்திருக்கிறான். உலகசரித்திரம் என்பது உலகமக்களின் சரித்திரமாம். தொன்றுதொட்டுஅவர்கள்வாழ்ந்துவந்த வாழ்க்கை எத்தகையது என்பது எதிர்காலத்தில் வருபவர்கள்விளங்கக்கூடியதாக அமைக்கப் பெற்றுள்ளது. மானுடவாழ்க்கையில் முன்னேற்றமும் பிற்போக்கும் ஒருமுறைக்கு உட்பட்டவைகளாகவே நிகழ்ந்து வந்துள்ளன. ஆகவாழ்க்கைமுறையும் சக்கரம் சுழல்வது போன்றுநிகழ்ந்து வந்துள்ளது.

அறம்என்பதும் தர்மம்என்பதும் ஒன்றே. வாழ்க்கை எத்தகையது என்று வரையறுத்து வைக்கப்பட்டது அறம். இயற்கையின் நடைமுறையை ஒழுங்காகத்தரித்திருப்பது எதுவோ அது தர்மம் ஆக இயற்கை முழுதும் தர்ம சொரூபமாயுள்ளது. ஒரு பொருளுக்கோ உயிருக்கோ உரியசிறப்பான செயலே அதன் தர்மமாகிறது. பொருள்களை நனைப்பது நீரின் தர்மம். நனைந்ததை உலர்த்துவது காற்றின் தர்மம். பொருட்களை தகிர்ப்பது தீயின் தர்மம். இங்ஙனம் ஜடப்பொருட்கள் அனைத்திற்கும் அதனதன் தர்மமுண்டு. உயிர்களின் தர்மம். அதனதன் இனத்தைப்பெருக்குதலும் அவைகளின் தர்மாகும். உணவைத்தேடுதல், நோய்க்குஇடங்கொடாதிருத்தல் எதிரியைத் தாக்குதல், எதிரியினின்று மீள்தல், ஆகியவைகள் உயிர்வாழ்வன அனைத்துக்கும் பொதுவான தர்மமாகும். இயல்பை அனுசரித்து அந்தந்தஉயிர்க்கென்றே அமைந்துள்ள தர்மமுண்டு நிலத்தினின்று உணவை எடுப்பது தாவரத்தின் தர்மம். புல்பூண்டு முதலியவைகளை மேய்ந்து உயிர் வாழ்வது ஆடுமாடுகளுக்கு உற்ற தர்மம். அவ் ஆடு மாடுகளைக் கொன்று தின்பது புலி சிங்கம் முதலியவைகளின் தர்மமாகும். ஆக எத்தனை உயிர்வகையோ அத்தனை வடிவெடுக்கிறது தர்மம்.

மற்ற உயிர்வகைகளின் தர்மத்தை நிர்ணயித்துச் சொல்வது போன்று மானுடரின் தர்மத்தைப்பற்றிச் சொல்லமுடியாது. பசுவின் தர்மம் என்றால் அது எல்லாப் பசுக்களுக்கும் பொதுவானது; விஷப்பாம்பின் தர்மம் என்றால் எல்லா விஷப்பாம்புகளுக்கும் அது பொருத்தமானது; புலியின் தர்மமும் அங்ஙனமே

---

[261 பக்கத்தொடர்ச்சி]
தன்னுள்ளே அந்தசக்தி இயங்கியிருப்பதை உணரச்செய்யவேண்டும். அந்தஉணர்ச்சி ஏற்பட்டுவிட்டால் பொறியளவிலிருக்கும் அந்தசக்தி காட்டுத்தீபோல்படர்ந்துவிடும். மக்களனைவரும் பரப்பிரம்ம ஸ்வரூபம் என்னும் ஞானத்தைத் தந்திடும்இது. அப்படிப்பட்ட கைங்கரியத்தைச் செய்யவல்லார் யார்? இந்தஉலகத்தின் பாரதசமுதாயத்தினர்தான். ஆத்மீகஞானமும்பண்பாடும்அனுஸ்டானமாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த கைங்கரியத்தைச்செய்யஎழவேண்டும்.



புலிகள் அனைத்துக்கும் ஒப்ப முடிந்தது. மானுட தர்மமோ அத்தகைதன்று. மக்களுள் மரம் செடி, கொடிபோன்றவர் உண்டு மக்களுள் விலங்குகள், பறவைகள் போன்றவர் உளர்; மக்களுள் மக்கள் போன்றவர் இருக்கின்றார்கள்; மக்களுள் தேவர் போன்றவர்களும் காணப்படுகின்றனர். எல்லா இனங்களின் இயல்புகளையும் மனிதரிடத்துக் காணலாம். எத்தனை மனிதர்களோ அத்தனை இயல்புகளும் உண்டென்று இயம்புவதும் பொருந்தும்: ஆகையால் அவர்களுக்கு தர்மத்தின் பாகுபாடு அல்லது அறத்தாறு இன்னதென்று இயம்ப முடியாது. ஒரு மனிதனுக்கு தர்மமாக அமையும் செயல் மற்றொரு மனிதனுக்கு அதர்மமாகலாம். ஆயினும் பொதுவாக ஏற்பட்டுள்ள விதி ஒன்றுண்டு. மேல் நிலைக்குப் போயுள்ள ஒரு மனிதனுக்கு தர்மம் என்று விதித்து வைத்திருப்பது மிக்க கடினமானது. மன பரிபாகம் அடையாதவனுக்கோ அதற்கேற்ற அறநெறி வகுத்து வைக்கப்பட்டிருக்கிறது. கீழோனுக்கு அமைந்துள்ள எளிய நெறிமுறையை மேலோன் கையாளுதல் பொருந்தாது. அப்படிச் செய்வதால் அவன் கீழ்மை அடைவான் படிப்படியாக மனிதன் மேல்நிலைக்குப் போகவேண்டும். மேல்நிலைக்குப் போக ஏற்ற செயலே மனிதனுக்குத் தர்மமாகிறது.

கடவுளுக்கு அமைந்துள்ள பல பெயர்களில் ஆழியான் என்பது ஒன்று. ஆழி என்பது சக்கரம். இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டே சக்கரபாணி என்றும் சக்கரதாரி என்றும் அளவற்ற பெயர்களும் வந்துள்ளன. அவன் தாங்கியிருக்கும் சக்கரம் எத்தகையது? இயற்கையின் நடைமுறைக்கு அது சின்னமாகிறது. இயற்கை ஓயாது இயங்குகிறது. இயக்கம் அனைத்தும் வட்டமிட்டு வருபவைகளாகின்றன. சில வட்டங்கள் அணுவுக்கு அணுவாகிய அவ்வளவு சிறியவைகள்; இன்னும் சில வட்டங்கள் அண்டங்கள்போன்றவைகளாம்; சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். வானத்தில் வால்மீன் ஒன்று தென்படுகிறது. அது அளப்பரிய வேகத்துடன் வானவெளியில் ஓடிக்கொண்டிருக்கிறது. லட்சக்கணக்கான அல்லது கோடிக்கணக்கான வருஷங்களில் அது ஒருதடவை வட்டமிடுவதை நிறைவேற்றுகிறது. நேர் கோடு ஒன்று அகண்டாகாரத்தில் பாயுமானால் அது வட்டமாய் விடுகி

றது என்பது கணித சாஸ்திரத்தின் கோட்பாடு. இங்ஙனம் பிரபஞ்சம் முழுதும் வட்டங்கள் நிறைந்தவைகள். பின்பு பிரபஞ்சத்தையே தாங்கியிருப்பவன் பரம்பொருள், அவனுடைய சந்நிதானத்தில் பிரபஞ்சம் இயங்குகிறது, அதற்கு அவனைத்தவிர இருப்பிடமில்லை. ஆகவே அவன் ஆழியான் எனப்படுகிறான்.

ஆழியின் இயக்கத்தில் உள்ள ஒழுங்குப் பாட்டை அறியுமளவும் ஒருவன் இறைவனது மகிமையை அறிகிறான். விரலில் ஒரு மோதிரத்தை அணிகிறோம் அதற்கும் ஆழியென்று பெயர்; அந்த மோதிரத்தில் ஒரு கடிகாரம் அமைக்கப்பெற்றிருக்கிறது. அது ஒழுங்காக ஓடுகிறது; சரியாகக் காலத்தைக் காட்டுகிறது. அத்தகைய நுண்பொருளை, நுண்ணிய சக்கரங்களைக் கொண்டு முறையாக அமைத்தவனை மெச்சவேண்டும். அவனுடைய அறிவின் புறத்தோற்றமாவது அச்சிறு கடிகாரம். அதைக் கண்டு வியப்பதைத்தவிர மனிதன் வேறு என்ன செய்ய முடியும்! பிரபஞ்சம் என்னும் ஆழியை ஒரு விரலில் ஏந்தியிருக்கிறான் அண்ட நாயகன். அவனை அறிதற்கு ஊனக்கண் உதவாது அதற்கு ஞானக்கண் வேண்டும், ஆனால் ஞானக்கண் இல்லாத நாம் என் செய்வது? ஊனக்கண்கொண்டு அவனது ஆழியை அறியலாம். பொறிவாயில் ஐந்துக்கும் ஊனக்கண் என்பது பொதுப்பெயர்.

ஊனக் கண்ணுக்கும், ஞானக்கண்ணுக்கும் இடைநிலையில் இருப்பவைகள் மனம் புத்தியாகிய அந்தக்கரணங்கள். ஐம்பொறிகளைக் கொண்டும் நல்லறிவைக்கொண்டும் ஞாலத்தை ஒருவாறு அறியலாம். அவ் அறிவு ஓங்க ஓங்க அது ஆழியானுடைய மகிமையைப்பற்றிய உணர்வாகிவிடும்.

ஆழியானை அறியமுயலுவது அறிவுடையார்கடமையாகும். அவனுடைய அரிய செயலைக்கொண்டு அவனை ஓரளவு அறியமுடியும். அப்பொழுது அவனை அறவாழி அந்தணன் என்றுசிறப்பித்துச் சொல்ல வேண்டியதாகும்.

> "அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
> பிறவாழி நீந்தல் அரிது."
>
> —— என்பதுபொய்யாமொழி



# சித்த மார்க்க வரலாறு.

(திரு: வி. க.)

சித்த மார்க்கம் முதல் முதல் கால்கொண்ட இடம் நாவலந்தீவு 'நாவலந்தீவு' என்னும் பெயர் நமது நாட்டுக்குரிய பெயர்களுள் ஒன்று. அப்பெயர் ஒருபோது உலகுக்கும் வழங்கி வந்தது 'பாரதகண்டம்' என்னும் பெயர். 'நாவலந்தீவு' என்னும் பெயருக்குப் பிற்பட்டது. நமது நாடு பாரதகண்டம் என்னும் பெயர் பெறுதற்கு முன்னரே, அதன்கண் சித்தமார்க்கம் நிலவியதேனில் அம்மார்க்கத்தின் தொன்மையை என்னென்று கூறுவது?

சித்த மார்க்கம், நாவலந் தீவினின்றும் நாலுபக்கங்களிலும் பரவிப் பரவி ஆங்காங்குள்ள மொழியில் ஒவ்வொருவிதப் பெயர் பெறலாயிற்று. நாளடைவில் ஒவ்வொரு பெயர் ஒவ்வொரு சமயமாகக் கொள்ளப்பட்டது. இப்பொழுது பல வேறு பெயர்களால் பலவேறு இடங்களில் நிலவிவரும் சமயங்கள் யாவும், சித்த மார்க்கம் என்னும் ஒன்றினின்றும் பிறந்தனவேயாகும். 'சமயங்களெல்லாம் சித்த மார்க்கத்தினின்றும் பிறந்தன' என்னும் உணர்வே பல இடங்களில் மாண்டு விட்டது. இந்நாளில் 'எல்லாச் சமயங்களும் சித்த மார்க்கம்' என்று சொல்வதும் எள்ளப்படும் போலும்!

சித்தர் யாவர்? சித்தர் சித்தி பெற்றவர்; சித்தையுடையவர். சித்தாவது, ஆத்ம சக்தியினின்றும் எழுவது. சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிந்தனையில் மூழ்க மூழ்கச் சித்த விகாரம் ஒடுங்கும். அஃது ஒடுங்க ஒடுங்க ஆத்ம சக்தி எழும் 'ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி' என்றார் வாதவூரடிகள்.

ஆத்ம சக்தியில் பலதிறப் படிகளுண்டு. முழு ஆத்ம சக்தி எல்லாவிதச் சித்துக்களையும் கூட்டும், அச்சக்தியால் ஆகாத தொன்றில்லை. அதைப் பெற்றவர் எல்லாஞ் செய்யவல்லவராவர். இயற்கை, அவர்கட்கு ஏவல் செய்யும், அவர் செயற்கருஞ் செயல் செய்வர், அவர்தந் திறங்களைத் தாயுமானார் 'வித்தகச் சித்தர் கணம்' என்னும் பகுதியில் விளக்கியுள்ளார்

சித்தர், சிவத்தை நினைந்து நினைந்து, சிவமானவராதலால், அவர், நரை, திரை, மூப்பு சாக்காடு முதலியவற்றைப் பெறுவதில்லை, அவர் என்றும் ஒரு பெற்றியராய்ச் சிவந்த மேனியராய், என்றும் இளைஞராய், அழகராய் வாழ்பவர் 'சுழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியுங்-கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரி-துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்-கழற்றி தவிர்ந்துடல் அஞ்சன மாமே', 'மூன்று மடக்குடைப் பாம்பிரண்டெட்டுள-வென்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்-நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட்டுன்றி யிருக்க உடம்பழி யாதே', 'உந்திச் சுழியின் உடனே பிராணனைச்-சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்-முந்தி மூகட்டின் நிறுத்தி அபானனைச்-சிந்தித்தெழுப்பச் சிவனவனுமே' 'நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்-சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு-ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்-பாலனு மாவர்பராநந்தி ஆணையே' எனவரூஉம்திருமூலர் திருவாக்குகளை நோக்குக. இத்தன்மையோர் சித்தரெனப்படுவர்.

தென்னாட்டில் சித்த மார்க்கம் நன்கு வளர்ந்து வந்தது. இடையில் அதற்குச் சிதைவு நேர்ந்தது. அப்போது, சமயகுரவர் நால்வர் தோன்றி, அம்மார்க்கத்தை ஓம்பினர். அந்நால்வரும் சித்தரே. அவர் அறிவுறுத்தியதும் சித்தமார்க்கமே, தங்களை ஆட்கொண்ட மூர்த்தியைச் 'சித்தனே திருவாலவாய் மேவிய-அத்தனே' என்றும் 'சித்தனைத் திருவண்ணாமலையனை' என்றும் 'சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே' என்றும் 'சித்தனைச் சிவலோகனை' என்றும் அப்பெருமக்கள் போற்றியிருத்தல் காண்க.

சிவன் எல்லாம் வல்லவனாதலால், அவன் சித்தன் எனப்பட்டான். அவன் தொடர்புகொண்டு வாழ்ந்து வருவோருஞ் சித்தரெனப்பட்டனர் 'சித்தர் வந்து பணியுஞ் செல்வச் சிரபுர மேயவனே' 'சித்தராய் வந்து தன்னைத் திருவடி வணங்குவார்கள்' 'சித்தி செய் பவர்கட் கெல்லாஞ் சேர்விடம்' 'சித்தர் சித்தம் வைத்தபுகழ் சிறுவன் ஊரன்' என வரூஉம் தமிழ்மறை மொழிகளை உன்னுக.

இப்பெருநிலையை அடைய முன்னாளில் முயன்றவர் பலர்; பின்னை நாளில் முயன்றவர் சிலர் இவருள் இராமலிங்க சுவாமிகளைச் சிறப்பாகக் குறிக்கலாம் இராமலிங்கசுவாமிகளுக்குத்திருவாசகத்தில் பொதுவாகத் தணியாக் காதல் உண்டு சிறப்பாக



# சண்முகனே சம்பந்தன்,

வரகவி திரு அ சுப்ரமண்ய பாரதி

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தவர்கள் எப்பாடு பட்டேனும் ஞானத்தைப் பெறவேண்டும். குற்றமற்ற ஞானமே பேரின்ப வீடடைவதற்குச் சாதகமாவது. சமையலுக்கு நெருப்பு எப்படி அவசியமோ, அப்படியே வீடுகூடுவதற்குத் தத்துவஞானம் பெறுவதவசியமாம்.

இத்தகைய அரியஞானம் பெறுவதற்கு, - சரியை, கிரியை யோகம் மூன்றும் காரணமாம். சரியை, கிரியை, யோகம் என்பவற்றுள்ளும், சரியைகிரியைக்குக் காரணமானது.

முத்தி அல்லது வீடென்பது எவ்வகை நிலையிலும் மேலாய, ஒருநிலையாம். மேலாயஒரு மாளிகையை அடைவதற்குப் படிக ;

முற்பக்கத்தொடர்ச்சி

அவர் தம் உள்ளத்தைக் கவர்ந்தது திருவண்டப்பகுதி. திருவண்டப்பகுதியில் உள்ள 'என்னையும் இருப்பதாக்கினன்' என்னும் பெருமொழி சுவாமிகள் உள்ளத்தைக் கோயில் கொண்டது' சுவாமிகள் அதில் படிந்து படிந்து அதுவாக முயன்றார், தம்மை இருப்பதாக்கிக்கொள்ள வேண்டுமென்ற வேட்கை அவருள் முருகி எழுந்தது. அவ்வேட்கையைத் தணித்துக்கொள்ள இராமலிங்கசுவாமிகள் மாணிக்கவாசகரை அடைந்து, அழுதஅழுகை அளவிடற் பாலதன்று. 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்னும் வாசகத்தின் நுட்பம் இராமலிங்க சுவாமிகளுக்குத் தெரியும். இராமலிங்க சுவாமிகள், மாணிக்க வாசகரை நோக்கி, 'உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற-திருவண்டப் பகுதியெனுந் திருவகவல் வாய்மலர்ந்த-குருவென்றப் பெருந்தவருங் கூறுகின்ற கோவே நீ-இருவென்ற தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே, என்று வேண்டுதல் செய்தார். இவ்வேண்டுதலின் நுட்பத்தை உன்ன உன்ன உண்மை விளங்கும். திருவண்டப் பகுதியில் உள்ளது இறவா நிலை. அந் நிலை பெற்றோர் சித்தராவர்.

சாதனமாயிருப்பதுபோல், மேலாய வீடு அடைவதற்கு – சரியை கிரியை, யோகம், ஞானம் என்பன சாதகமாயிருக்கின்றன.

இந்நான்கினுள் சரியை முதற்படி. கிரியை இரண்டாம்படியாம். யோகம் மூன்றாம்படி, ஞானம் நான்காம்படி.

தவம், தியானம், தியாகம்முதலியவெல்லாம்-சரியை, கிரியை யோகம் என்பவற்றுள் அடங்கும். அடிமைநடப்பதுபோல் கடவுளிடத்து நடப்பது சரியையாம். இதனை தாசமார்க்கமென்பர். இந்தமார்க்கத்தினின்று நாமுய்யத் திருவருள்புரிந்த பெரியார் வாகீசராவர், [அப்பர்ஸ்வாமிகள்] இவர்தாம் விதேக முத்தி [தேகமில்லா தநிலை] பரியந்தம் சரியையினை மேற்கொண்டு விளங்கியபெரியார்.

தந்தையிடம் மகன் நடப்பதுப்பதுபோல் கடவுளிடம் நடந்துகொள்ளுவது கிரியையாகும். இதனை சற்புத்திரமார்க்கமென்பர். இந்த மார்க்கத்தில் நடந்து நாம் நல்வழிபட்டுய்யத் திருவருள் செய்த பெரியார் திருஞானசம்பந்த ஸ்வாமிகளாவர்.

தோழனிடத்துத் தோழன் நடப்பதுபோல் கடவுளிடம் நடந்துகொள்வது யோகம், இதனைச் சகமார்க்கம் என்பர். இந்தமார்க்கத்தில் நடந்து நாம் நல்லநெறி கண்டுய்யத்திருவருள் செய்தபெரியார் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளாவர். இவருக்குத் தம்பிரான் தோழன் என்னும் திருநாமம் உண்டு. இவர் பரம யோகியாக விளங்கினர் என்பது, இவர் கைலாசத்திற்கு வெள்ளையானையிலேறிச்சென்றார் என்பது நமக்கு நன்குணர்த்துவதாம்.

ஆத்மாவே சிவம், சிவமே ஆத்மா என்றுணர்தல் ஞானமாம். ஸ்ரீராமன் யார்? மகாவிஷ்ணு; மகாவிஷ்ணு யார்? ஸ்ரீராமன்என்பதுபோல்சிவமே ஆத்மா; ஆத்மாவேசிவம் என்பதுமாம். இதனை ஸன்மார்க்கமென்பர். இந்தமார்க்கத்தின் முறைகண்டு நாம் நன்னெறிப்பட்டுய்யத் திருவருள் புரிந்தவர்மாணிக்கவாசகஸ்வாமிகளாவர். இவர் பரமஅத்வைதஞானியாக விளங்கினர்.

"சித்தமல மறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"



# சற்குரு

[பரமானந்தவல்லி அம்மையார்]

(முற்றொடர்ச்சி)

(அன்புநெறிவழியேசென்று இறைவனை அடையவிரும்பித்தம்மைச்சென்றடைந்த மாணவனைக்குரு ஆசீர்வதிக்கின்றார். அந்நிலையில் அம்மாணவன்)குருதேவா! "கண்ணீர்பாயாத ஏழையாகிய என்னைத்தாயாகப்பரிந்தழைத்த நின் தலையாய அன்பைத் தமியேன் என்னென்றுரைப்பேன்! என்வாயிலும் மனத்திலும் மருவிநின்றகலா நின்மாண்பை எவ்வாறு போற்றுவேன்! இம்மானில மக்களின் அஞ்ஞானத்தை நீக்குபவன் நீயன்றோ! நின்னை யான்காணப்பெற்றதனாலன்றோஎன் கன்மந் தொலைந்தது. என் அன்பிற்குப் பாத்திரமாய அருட்பெருவடிவே! உலகிலுள்ள யாவற்றிற்கும் மேலான சிவனும் நீயே! அரசனும் நீயே! அன்பின் வடிவமும் நீயே! இவையாவும் ஒருங்கமைந்த நின்பெருமையைத் தமியேன் உரைப்பதற்கு எளிதன்றோ!" எனப்பலவாறாகப் போற்றிப்புகழ்கின்றான். இன்னும் குருவின்பால் வைத்த ஆராத அன்பினான் அவ்வடிவை நோக்கி,

---

முற்பக்கத்தொடர்ச்சி

என்ற அவர் தம்திருவாக்கே அதற்குச் சான்றாய் இலகுவதாம்.

சற்புத்திரமார்க்க நிலையில் நின்ற சம்பந்தஸ்வாமிகளை, நம் சுப்ரமண்யக்கடவுளின் திருவவதாரமெனப் போற்றுகின்றது உலகம். சுப்ரமண்யர் ஞான பண்டிதர் அல்லவா? அந்த அம்சம் சம்பந்தரிடம் விளங்குகிறதென்பதை திருஞானசம்பந்தரென்னும்அவர்தம் திருப்பெயரே நமக்கு விளக்குவதாம். இதனாலே தான்:–

"ஓமெனுமாமறைப்பொருளை அரனுவப்பவிரித்தருளிஉலகமீன்ற
நாமகளைத்னைத்தளைத்து நிருதர்குல சுழித்தமரர் நாடுமீட்டுக்
காமலிசீர் காழியிற்சம் பந்தனென வந்தகிலம்காத்தசேவை
சாமியென தகத்தொளியாய்த்தழைத்து நினைத்தவை யனைத்தும்
தருமெய்த்தேவே"

என்றதிருவாக்கும் பிறந்துள்ளது.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே"

எனக்கூறுகிறான். தாயினுமிரங்கி மக்களை வந்தாள்பவன் குருவாகும். அத்தூயவன் சரணம் யாம் சுமக்கப் பெறுதலே எமது நற்பணியாகும்: அப்பண்ணவனைப் பாடுதலேவாயின் பண்பாகும். அவ்வருள் வடிவிற்கு மலர்தூவித் துதித்தலே கையின் கடனாகும். நேயமோடவனை அனுதினமும் நினைத்தலே நெஞ்சின் நேர்மையாகும்.

தன்பால் வந்தோர்க்குத் தன்னருள் பாலிப்பவரும், தீ நெறியில் தலைப்படும் மாணவனை நன்னெறியிற் செலுத்தும் நற்பண்பு வாய்ந்தவருமாகிய குருவினது இலக்கணங்களைப் பார்ப்போம்;

குரு—[கு-ரு]கு அஞ்ஞானம், ரு நீக்குபவன். குருஎன்பது அஞ்ஞானத்தை நீக்குபவன் எனப்பொருள்படும். தன் னிலையிலே நிலைத்து நின்று சச்சிதானந்த இலக்கணங்களை நன்குணர்ந்து உலகத்தினர்கட்கு அவன் அருள்பெறும் உன்னதநெறியைக்காட்டும் உயரியதன்மை பூண்டு குருவிளங்குகின்றார். மும்மல ஆசையினின்றும் நீங்கி உள்ளத்தூய்மை கொண்டு அன்பின் இருப்பிடமாய், கருணையின் பெருக்காய் விளங்குகின்றார். இறைவனின் சின்னமாய்த் திகழ்கின்றார். உலகத்து மக்களின் அறியாமையைக்களைந்து அவர்கட்கு வீட்டுநெறியைப்போதிக்கும் பெரும்பேறு குருவினுடையதாகும்.

பக்குவரை உய்விக்கும்பொருட்டு அவதரிப்பவரே குருவாகும். இறைவனே மனிதவடிவந்தாங்கிக் குருவாய் அவதரிப்பவர். இவ்வாறு அவதரித்தவர்களை அவதார புருஷர்களென்பர்: இவ்வவதாரபுருஷர்கள் மேலேயிருந்து கீழேயிறங்கி மக்களையுய்விக்கும் அருள் (குரு) வடிவாய்அமைகின்றனர். அருட்தோன்றலாகிய சற்குரு எம்மதசாரங்களையும் நன்குணர்ந்தவராவர். அவர் எம்மதமும் இறைவன்நிலையைச்சொல்லும் என்னும் பெருமனம்



படைத்தவராவர். இதனாலே அவர் மத வெறுப்பில்லாதவராய் மதங்கட்கு அதீதமாய் விளங்கும்சச்சிதானந்தப் பொருளைஉள்ளபடிஉணர்ந்தஉத்தமனாகின்றார். சுருங்கக்கூறின்இறைவனே குருவடிவாய் வருவது என்றால் குருவின் மகிமைக்குமெல்லையுளதோ?

இத்தகைய குருமார்கள் பலவகையாய் அமைகின்றனர். விவேகத்தினால் முத்திக்குரிய சாதனங்களை உண்டாக்கும்குருவை சூசகன் என்பர். உலகம்பொய்யென்றும் ஆன்மாநித்தியமென்றுமுணர்ந்து ஆன்மநேயத்தை உண்டாக்குபவரை வாசககுருஎன்பர். சிவத்திற்கும், சீவனுக்கும் உள்ள ஐக்கியத்தை விளக்குபவரைக்காரககுருஎன்பர். சந்தேகத்தைநீக்கி நிலையாயுள்ள மோக்ஷத்தை(முத்தியை) அருளுபவரை நிகிதகுரு என்பர். இவர்களுள் நிகிதகுருவேமேலானவராகும்.

உலகிலுள்ள எக்காரணங்கட்கும், எம்முயற்சிகட்கும்குருமார்கள் இன்றியமையாமல் வேண்டப்படுகின்றனர். குருவில்லாமல் உலகில் எம்முயற்சியும் ஈடேறமாட்டாதுஎன்றால் அதுமிகையாகாது. மனம் வாக்கிற்கு எட்டப்படாத நித்தியப் பொருளை உணர்த்துவதற்கு மனிதவடிவந்தாங்கிய சற்குருவினாலன்றி இறைவனாலும் உணர்த்த இயலாதென்று அருள்நூல்கள் கூறுகின்றன. இதனாலன்றோகுரு, கீதையில் குருவே பிரம்மம். குருவேவிஷ்ணு குருவே சகலதெய்வமுமாவர், எனக்கூறியுள்ளார்,

இத்தகைய குணமெனுங் குன்றேறி நின்ற குருவிற்குக் கோபம் வந்தகாலத்தில் உருத்திரனாகவும், சூரியனாகவும் பாவிக்கும்படியும்; சாந்தமான காலத்து சமுத்திரமாகவும்; விஷ்ணுவாகவும், சந்திரனாகவும் பாவிக்கும்படியும்; விகாரகாலத்தில் பிரம்மாவாகவும் பாவிக்கும்படியும் உபநிஷத்துக்கள் கூறுகின்றன.

இத்தகைய சற்குருவின் திருநாமத்தை ஓதிக்கொண்டிருந்தால் உலகில் வேண்டிய பலன்யாவும் கைகூடும். அவர் நீராடிய (ஸ்நானஞ்செய்த) நீர்கங்கை முதலிய நற்தீர்த்தங்கட்குச் சமமாகும். அவருடைய திருமேனியே சகலதெய்வமுமாகும். அவருடைய செவ்வியதிருவாக்கிலிருந்து மலர்ந்த மொழிகள் பிறவியாகியநோய்க்கு மருந்தாகும்: இதனை,

# ஸ்திரீ தர்மம்.

சரஸன்

உலகம் இயங்குவது ஸ்திரீ தர்மத்தினால் தான். உலகத்து வரை போகவேண்டியதில்லை. ஒவ்வொரு இல்லத்தையும் எடுத்து கொள்வோம். ஒருவீட்டிலே பல ஆண்கள் இருப்பினும், பலவித மானசெல்வங்கள் கொடுத்திருப்பினும் ஒருஸ்திரீ அங்கு இல்லையே னில், அந்தவீடு வீடாகாது. வீட்டைஅலங்கரிப்பவள் ஸ்திரீ. குடு ம்பத்தையும்போஷிப்பவள் ஸ்திரீ; குடும்பத்திற்கு லக்ஷ்மியின் அருளைத்தேடித்தருபவள் ஸ்திரீ. இல்லத்தலைவன் வெளியே சென்று அலைந்துவிட்டு வருகையில் அவன்களைப்பைப் போக்கி இன்சொல்லால் உபசரித்துமகிழ்விப்பவள் ஸ்திரீ.

மற்றைய தர்மங்களைவிட ஸ்திரீ தர்மம் மிகவும் சிறந்தது. ஆதிகாலத்தில் ஸ்திரிதர்மத்திற்கு விசேஷ கவனமும் பெருமை யும் இருந்தது. கொண்டகணவனின் உயிரை யமனிடமிருந்து பெற்றதும், சூரியன் உதயமேஏற்படாமல் செய்ததும், இந்திரனை மானபங்கம்செய்ததும் ஸ்திரீ தர்மத்தின் விசேஷத்தினால் அல் லவா?

---

முற்பக்கத்தொடர்ச்சி

"பலன்கள் வேண்டியபரிசெலாம் பலித்திடும் பரமதத்துவஞானி
நலன்கொள் நாமமாம் மந்திரஞ்செபித்திடில் நயந்தவர் நீராடும்
சலங்கொள் தீர்த்தமாமவன் திருமேனியே சகலதெய்வமும்செய்
மலர்ந்த வாசகம் மறுபிறப் பெனவரும் மயற்பிணி மருந்தாகும்"

எனஆன்றோர் வாக்கினால் அறியக் கிடக்கின்றது. இத்தகைய பெருமைபடைத்துவிளங்குகின்றார்குரு. எனவே, குருவினுடைய தன்மை எத்துணைப்பெருமை வாய்ந்ததென்பது அறியற்பாற்று. இத்தன்மையான குருவினிடத்தே உத்தமமாணவன் வைத்தகாத லினால் கசிந்து கண்ணீர்மல்கிநின்று "என்னையாளவந்த கருணைக் கடலே! எனது பிறவியாகிய கடலில் நின்று கரையேறுதற்கு என் ஐயங்களை (சந்தேகங்களை)நீக்கியருளவேண்டுமென" வேண் டுகின்றான்- அதற்குக் குருஇயைந்து சொல்லத்தொடங்குகின்றார்.

[தொடரும்]

சுபம்!



ஆனால் துரதிருஷ்டவசமாய் இன்றைய உலகத்தினால் ஸ்திரீ தர் மம் நலிவுற்றிருக்கிறது. என்றுதான் தோன்றுகிறது. இதற்கு காரணம் பெரிதும் மேனாட்டுக் கல்விமுறையும் நாகரிகமும் நம் மையடிமைகொண்டு விட்டதுதான்.

ஸ்திரிகளுக்குக் கல்விவேண்டாம் என்று யார்சொல்வார்கள் வேண்டியதுதான் ஆனால் அந்தக்கல்வி நம் புராதன நாகரிகமும் பண்பாடும் ஆத்மபலமும் வளர்ச்சிக்கியைய உதவி செய்யக்கூடிய முறையில் அமையவேண்டும். அம்மாதிரி இல்லையேயென்றுதான் துக்கிக்கவேண்டியிருக்கிறது.

ஸ்திரிதர்மத்தின் அடிப்படை கற்புப்பெண்மையைக் காத்து கொள்வதும்தான்; இவ்விரண்டும் ஸ்திரிதர்மத்தின் இருகண்களா கும். மேனாட்டுஸ்திரிகளுக்கும் நம்நாட்டு ஸ்திரிகளுக்கும் இங்கு தான் தாரதம்யமுண்டு. மேனாட்டு ஸ்திரிகள் தங்கள் கணவன் மாவ்ரத்தவிர பிறருடனும் சகஜமாய்ப் பழக அவர்கள் பண்பாடு இடந்தரலாம். அவர்களின் பெண்மையை இழக்கவும் அநுமதிக் கலாம்.

ஆனால் நம் கலாச்சாரம் வேறு. நம்பண்பாடு ஸ்திரிகளைப்புனி தக்கண்கொண்டு நோக்கச் செய்கிறது. ஒரு ஆண் தன் சொந்த மனைவியைத்தவிர வேறு ஸ்திரிகளைத் தாயாகவுப் சகோதரியாக வும் மதிக்கச்சொல்லிக் கொடுத்திருக்கிறது.

இத்தகைய தெய்வீகத்தன்மை பொருந்திய நம் ஸ்திரீ ரத்தி னங்கள், சக்திஸ்வரூபங்கள், நம் கலாச்சாரத்திற்கும் பண்பாட் டிற்கும் உகந்த வகையில் ஒழுகி ஸ்திரீதர்மத்தின் உன்னத மகி மையை உலகத்துக்கு மீண்டும் எடுத்துக்காட்டவேண்டும்.

ஒரு சல்லிக்கும் உதவாத இந்த அந்நிய நாகரீகத்திற்கு அடி மையாகி விடாமல் இருக்கவேண்டும். நம்நாட்டுப்பெருமைகளைப் பிறநாட்டவர்களும் போற்றும்படி செய்யாவிடினும் நம் நாட்டுப் பெருமையை நாமாவது விடாமல் காப்பாற்றிக்கொள்வது அவசி யம். வாழ்க நம் ஸ்திரீ தர்மம்.

# நல்லூர் வெயிலுகந்தபிள்ளையார்

திருவருள்

கி. பி. 1478ல் நல்லூரை தலைநகராகக்கொண்டு சிங்கைப்பரராசசேகரன் ஆட்சிசெலுத்தினான். இவன் ஓர் இந்துசமய அபிமானி. ஆதலினால் நல்லூரை இந்து சமயத்தின் ஆதி உறைவிடமாக்கக் கருதி நான்கு திக்குகளிலும் நான்கு ஆலயங்களைக் கட்டினான். அந்தவகையில் கிழக்கே வெயிலுகந்தபிள்ளையாரின் ஆலயம் எழுந்தது.

ஆலயத்தைக்கட்டி பிரதிஷ்டை செய்து சேவித்த மன்னன் ஒளியுடன் இருக்கக் கண்டதனால், ஒளிதந்த பிள்ளையாரென்று நாமகரணமிட்டான், ஒளிக்கு வெயில் என்ற கருத்தைக்கொண்டு பின்னொருகாலத்தில வெயிலுகந்த பிள்ளையாரென்று திரிந்தது.

வெயிலுகந்தபிள்ளையார் என்ற நாமம் காலதேவனின் யந்திர தகட்டின் கைபட்டு வெயில் விழுந்த பிள்ளையாரென வேறு உருமாறி மருவி விட்டது. அதற்கு பாட்டிமார் காரணமும் கூறுகிறார்கள்.

பண்டைக்காலத்தில் கிழக்குத் திசையில் பெரிய கட்டிடங்கள் இருக்கவில்லை. ஆதலினால் கோவிற் கட்டிடமே பெரிதாக திகழ்ந்தது. சூரியன் உதித்ததும் வெயில் முதல் முதல் கோவிலில் விழுந்தது. ஆதலினால் வெயில் விழுந்த பிள்ளையாரென்ற சிறப்பு விருது ஏற்படலாயிற்று.

போர்த்துக்கேயரின் தனி ஆட்சியின் பயனாக பிலிப் ஒலிவேரு என்ற தளபதி ஈவு இரக்கமின்றி ஆலயத்தை இடித்து தரைமட்டமாக்கினான். பின்னர் நாட்டில் சமாதானம் ஏற்பட்ட காலையில் மக்கள் சேர்ந்து திரும்பவும் அதே இடத்திலே ஆலயத்தை எழுப்பினார்கள்.

பண்டைய ஆலயம் இடிக்கப்பட்டாலும் அதன் கர்ப்பக்கிரகம் இடிக்கப்படவில்லை. ஆதலினாற்றான் இன்றும் கற்பக்கிரகம்



ஆலயத்தை அழகுறச் செய்கிறது கர்ப்பக்கிரகம் பண்டைக்கால முறைப்படி சுண்ணாம்பாலும், மண்ணாலும் ஆக்கப்பட்டது.

இக்கோவிலை அண்டியவர்கள் ஹரிசனங்களே. அன்று அரசாங்க ஊழியர்களின் வழிபாட்டிற்காக கட்டப்பட்டமையினாற்றான் இன்று பிரபலியமாகவிளங்காதிருப்பது என்றாலும் புராதனம் என்ற புதுமை ஆலயத்திலே ததும்பிக்கிடக்கிறது

சிறந்த திருவிழாக்கள் செய்து சுவாமியை வீதிவலம் கொண்டுவர போதியஉள்வீதியோ, வெளிவீதியோ கிடையாது என்றாலும் சிறந்தவொரு பூந்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

வணக்கம் செய்யத்தக்க நல்ல இடமாகவும் நிம்மதியான தோற்றமாகவும், இவ்வாலயம் அமைந்திருப்பது போற்றக்கூடியதே. அதற்கேற்றாற்போல் கோவிலின் முன்பு இருக்கும் அரசமரத்தின் நிழலும், அருகேநடப்பட்ட அலரிமரங்களின் நறுமணமும் மனத்திற்கு சாந்தியை அளித்து, இறைவனிடம் சிந்தையை செலுத்தத்தக்கதாக இருப்பது ஓர் வரப்பிரசாதமே.

இன்று ஆலயத்தைக் காண்பவர்கள் புராதன ஆலயமோ என்று ஐயுறுவார்கள். அந்தவகைக்கு மக்கள் ஆலயத்தை புதுப்பித்து தூய்மையாக வைத்திருக்கிறார்கள். என்றாலும் சிங்கப்பாராசசேகரனால் எழுப்பப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்ட வெயிலுகந்த பிள்ளையாரின் அருள் போற்றக்கூடியதே.

(வளரும்)

## ஸ்ரீ அரவிந்தரின் அறவுரைகள்.

[மொழிபெயர்த்துத்தொகுத்தது "எம் கே என்"]

தம்மை தமது முழுமையிலேயேஎவ்வித ஒழிவுமறைவுமின்றி தன்னிடம் ஒப்படைத்துவிடுபவர்களுக்கு, தெய்வசக்தி தன்னைத் தந்து அருளுகிறது. அவர்களுக்கு அமைதி, ஒளி, ஆற்றல்[சக்தி -Power] இன்பம், விடுதலை, [சுதந்திரம்-Freedom] விரிந்ததன்மை, அறிவின் வளர்ச்சி, ஆனந்தமயாவும் உரியவையாகின்றன.

# ஜீவதாபம்.

(மு: சிவராசா)

பூஞ்செடி ஒன்று. அதில் எத்தனை இன்பம்! அவற்றைவிட அதிகம் அதிலுள்ள துன்பமுட்கள் இடையிடையே தகிக்கும் வெயிலினாலும் வீசும் சூறாவளியினாலும் அல்லற்படும் புஷபச்செடியைக் காணும்போது எத்தனை வேதனை! இன்று மலர்கள் எல்லாம் உதிர்ந்து, அரும்புகளெல்லாம் ஒடிந்து இலைகள் இல்லாத அந்தமொட்டைச்செடி அல்லலின் எல்லையில் நிற்கிறது. அதுஏன் தான் பிறந்ததோ?

நான் ஏன்பிறந்தேன்? எப்போது என்வாழ்வு மலரும்? யாருக்கு என்மலரைக்கொடுப்பேன்?—இதுஎன்ன இன்னிசை! தென்றல் இசைக்கும் இந்தஇசையை இதுநாள்வரை நான் கேட்கவில்லையேஇதுஎன் இதயவீணையை மீட்டுகின்றதே!

செடியில் ஓர் அரும்பு பிறக்கிறது. இலையும் தளிருமற்றசெடியில் ஓர் அரும்பு.

அந்தஇன்னிசை இன்று நாதவெள்ளமாய்ப் பெருகின்றதே மனிதகற்பனைக்கு எட்டாத இந்தத்தெவீகஇசை —இதன் இன்பம் என் இதயத்தைக் குளுகுளுக்கச்செய்கிறது. உள்ளமும் உடலும் உருகுகின்றதே! செடியின் அரும்பு தலைநீட்டுகின்றது.

இன்னிசை மட்டுமா: கண்ணைமூடியிருக்கும்போது ஒரு ஒளிப்பிழம்பு; ஒளிப்பிழம்பல்ல-உதய சூரியனின் ஒளியுடனும் தண்மதியின் குளிர்ச்சியுடனும் இயற்கையின் எழில் எல்லாம் தாங்கிய அமுதவடிவன்! என்ன, என்னைப்பார்த்து புன்முறுவல் புரிகின்றானே!! "வந்துவிட்டேன், வந்துவிட்டேன்"— கண்ணைத்திறந்து எழுந்து ஓடினால்... ஆ! மறைந்துவிட்டான்.

தலை நீட்டிய அரும்பில்மலர இருக்கும் இதழ்கள் இடையிடையே தெரிகின்றன.



நான் என் நாதனைக் கண்டேன்! அவன் என்னை விரும்புகிறான். அவன் அழகிற்கும் என் அவலட்சணத்திற்கும், அவன் பெருமைக்கும் என் சிறுமைக்கும், அப்பப்ப! மலைக்கும் மடுவுக்கும் என்று சொல்லுவார்களே.... அவனை அடைய எனக்குத்தகுதி உண்டா? ஆம் உண்டு. இல்லையெனில் அவன் ஏன் என்னைத் தேடி வந்தான்? நான் பிறந்ததன் நோக்கத்தைத் தெரிந்து கொண்டேன். என் நாதனை அடைவதற்கே நான் இங்கு வந்தேன்.

தன்னை வதைக்கும் வெயிலின் வெப்பத்தையும், பெருமழையின் கொடுமையையும், பேய்க்காற்றின் வீச்சையும் பொறுத்து-எதிர்த்து நிற்கும் அச்செடியில் தோன்றிய அரும்பு, ஒரே அரும்பு பெரிதாகி மொட்டாகிவிட்டது, நாளையோ அன்றி மறுநாளோ அது மலரப்போகிறது.

என்வாழ்வு மலர்வது எப்போது? என்வாழ்வை மலர்விப்பதற்கென்றே வந்த என் நாதன் இன்னிசை வேந்தன்; தன் மோகனப்புன்னகையால் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட பிரபு; என்னை வாவென்று அழைத்தவானவன் இன்று ஏன் என்னைத் தேடிவரவில்லை? ஒருகால் என்னை மறந்திருப்பானோ? அவன்வராவிடில் அவனைத் தேடிச்செல்வது என் கடமையல்லவா. நாதா நீ எங்கிருக்கிறாய்? உன்னை எங்கேதேடுவேன்? எனது இதயம் நினது நேசத்தில் கலக்க அவாவுகின்றது. உன் எழிலுருவைக் காணத் துடிக்கிறது என் இதயமலரின் வர்ணம் ஆழமானதல்ல. அதில் நறுமணம் கமழுவதில்லை. ஆனாலும் அதை உன்பாதங்களில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

நாதா உன்னை எங்கெல்லாம் தேடுகிறேன்! நீ இன்னமும் என்னுடன் கண்ணாம்பூச்சி விளையாடுகிறாயா? என்சோர்வைக் கண்டாவது உன் இதயம் இரங்காதா? நீ என்னை அழைத்த அன்றே உன்னிடம் ஓடிவரவில்லை என்று கோபித்துக் கொண்டாயா? என்ன செய்வேன்; பாழும் கண்கள் அன்று என்னை ஏமாற்றிவிட்டனவே!

பிரபு! உன்னைநினைத்தால் உள்ளம் உருகுகிறது, கனவிலாவது உன் எழிலுருவைக் காணமுடியவில்லையே, துயின்றாலல்லவா

கனவு காண்பதற்கு இமைகள்மூடவேமறுக்கும்போது நானென்னசெய்யலாம்? உன்பிரிவு என்னைச்சித்திரவதை செய்கிறது; உன்னைப்பிரிந்து எத்தனைகாலமாகிறது! நாட்களும் மாதங்களும் வருடங்களும் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன. இன்னும் நான் உன்னைக்கண்டபாடில்லை. மரணத்தில்தான் உன்னைக்காணல்லாமா? அப்படியானல் அந்தமரணத்தை இப்போதே வரவேற்கிறேன். உன்னைக்காணாத ஒவ்வொருகணமும் ஒவ்வொருயுகமாகக் காண்கிறதே தேவாதிதேவா! உலகநாயகனே! இனியும் இந்த ஏழையை வருத்தாதே உன் அருள் ஒளிகாட்டி என்னை உன்னோடு அணைத்துக்கொள். நான் உனக்கு என்ன கொண்டுவருவேன் என்று கேட்காதே என்னிடமுள்ள பொருட்கள் யாவையும் நீ தந்தவையே. அதனால் அவை ஒன்றையும் உனக்குக் காணிக்கையாகக் கொண்டுவரமாட்டேன். என் சோகம்மட்டும் என் சொந்தஉடைமை. என் சோகத்தில் பிறந்த கண்ணீர் முத்துக்களை மாலையாகக்கோத்து உனக்குக் காணிக்கையாகக் கொண்டுவரும்போது, நீ எனக்கு அருளைப் பரிசாக அளிப்பாய். வெறுமையான என் வாழ்வை முடித்துக்கொண்டு இதோ உன்னிடம் வருகிறேன்!

மரணமே! வாழ்வு கடைசியில்உன்னிடந்தான் நிறைவெய்துகிறது. உன்உதவியினாலேயேஎன் பரமாத்மாவை அடையப் போகிறேன்!

வெறுங்கையுடனும் ஆர்வ இதயத்துடனும் என் யாத்திரை ஆரம்பமாகிறது. இந்தயாத்திரையின் முடிவில் நாதா! உன்னையடைய அருள்தா!

செடியின் அரும்பு மொட்டாகி, மலராகி, மணம்வீசி ஆலயத்தில் இறைவன் பாதங்களில் அர்ச்சிக்கப்பட்டிருக்கிறது.





# சான்றோர் உபதேசசாரம்.

பொன்னரம்

16 புத்தர் ( ) புனித நபியோடு
பக்த ஏ பாரினிற் பலர்இவை
நித்தன் ஆ நிமலன் அருளினை
எத்தி சைதெ ம் எங்கும் பரப்பினர்

17 மற்றும் இத்தல ப பெரும் ஞானிகள்
உற்ற காலத்தில் உலகினில் தோற்றியே
மற்ற மாந்தர்போல் பிறந்து மறைகுவர்
குற்றம் இவ்வகை கூடிடா சிவத்திற்கே

18 உலகில் தோற்றிப்பின் ஒழிவது சிவமல்ல
உலகை ஆக்கியும் உவந்ததைக் காத்துமே
அலகில் சோதியாய் அழிவின்றி என்றுமே
நிலவும் ஓர்இறை சிவம்இதை நீஅறி

19 ஞான வான்களாய் ஞாலத்தில் தோன்றினோர்
போன போக்கையும் போதனை தன்னையும்
மானத் தோடிந்த மாநில மக்களும்
ஞான மார்க்கமாய் நாட்டினர் என்றறி

20 தச மக்கள்இவ் உத்தம தேவரில்
பாசம் வைத்தவர் பண்பைப் பரப்பிட
மாசில் லாதபல் மார்க்கமும் ஓங்கின
பேசு வார்பலர் பேதங்கள் காட்டியே

21 உயர்வு தாழ்வினை உண்மையில் இல்லையே
பெயர் வழக்கினில் பேதமும் வந்திடல்
சுயவர் வைத்தபொய்க் கற்பனை யேஅவை
உயர்ந்த உண்மையை உணர்த்துவ சமயமே

22 மாறு கொள்கைசேர் மார்க்கம் இவையெல்லாம்
வேறு தெய்வமாய் வேண்டி வணங்கினும்
கூறும் உண்மையால் குறிப்பதோர் ஈசனே
ஆறு யாவும்ஓர் ஆழிவந் தணைதல் போல்

(தொடரும்)

Registered at the G, P, O, as a News Paper No. H, C, 59

**நால்வர் படங்கள்**

பெரிய அளவில் வெளிவந்துள்ளன வீட்டில் பூஜை அறையை
அலங்கரிக்கத் தக்கவை
விலை ரூபா 1-50 தபாற்செலவு வேறு
வேண்டுவோர் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**சரவண அச்சகம் நாவலப்பிட்டி.**

---

**B. S.** கலிதிராஜ செட்டியார் அவர்களால்
வெளியிடப்பட்டது

**ஷட்கோண ஷண்முகப்பிரகாசம்**

**சரவணபவ எழுத்துப்படம்**

**ஆகியவை இரண்டும் பூஜைக்கு சிறந்தவை**

**படம் ஒன்றுக்கு விலை 1—8—0 தபால்செலவு ரீ**

**பாலதண்டபாணி பிக்சர் ஹவுஸ்**

**குமரன் வீதி,** திருப்பூர் S, I, Ry.

---

**சுரபி**

**(மாணவரின் மாதப்பத்திரிகை)**

**வருடச்சந்தா ரூபா 1-50**

**விலாசம்: சுரபி காரியாலயம்,**

**66, பண்ணைவீதி யாழ்ப்பாணம் (இலங்கை)**

இன்றைய இளைஞரே எதிர்கால உலகம்—என்பதற்கேற்ப இன்று மாணவரின் சுரபியாக விளங்குவது எதிர்கால மனிதர்களை படைக்கும் உட்பொருள் கொண்டுவிளங்குவது யாவரும் வரவேற்கத்தக்கதாகும். மாணவரும் மற்றையோரும் ஆதரித்துச் 'சுரபி'யைவளர்ப்பார்களாக. சுரபி மாணவருள்ளத்தில் அறிவைச்சுரக்கச்செய்யும் தொண்டில் வெற்றிபெற்று வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

---

கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர் நா.முத்தையா ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி சிலோன்
அச்சுப்பதிப்பு 'சரவண' அச்சகம், நாவலப்பிட்டி 16-8-52